

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.02.2026) அண்ணா அறிவாலயத்தில், திராவிடத் தமிழர் கட்சியின் தலைவர் சி.வெண்மணி சந்தித்து, கோவையில் 15.02.2026 அன்று நடைபெறவுள்ள "திசை காட்டும் திராவிடம்" அரசியல் மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன், மாநில இணைப் பொது செயலாளர் ஈரோடு பொன்னுசாமி, தலைமை நிலைய செயலாளர் பேரறிவாளன், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (9.2.2026) புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஹாக்கி யூனிட் ஆப் தமிழ்நாடு நிர்வாகிகள் தலைவர் சேகர் ஜே மனோகரன் தலைமையில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் பொதுச் செயலாளர் முனைவர் பி.செந்தில் ராஜ்குமார், பொருளாளர் முனைவர் க.சேவியர் ஜோதி சற்குணம், துணைத்தலைவர்கள் வினோத் காந்தி, எஸ்.திருமாவளவன் மற்றும் இணை செயலாளர் எல்.கிளமண்ட் லூர்துராஜ் ஆகியோர் உள்ளனர்.

### கோட்டூர்புரம், ஜிப்ஸ் காலனி பகுதியில் உள்ள

# 158 நரிக்குறவர் குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆணைகளை வழங்கினார்!



சென்னை,பிப்.10-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.02.2026) வருவாய்த்துறை சார்பாக, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கிண்டி வட்டம், கோட்டூர்புரம் ஜிப்ஸ் காலனி மற்றும் அரசுப் பண்ணை, மடுவன்கரை சமுதாய கூடம் ஆகிய இடங்களில் நடைபெற்ற விழாக்களில் 158 நரிக்குறவர் பிரிவு பயனாளிகள் உட்பட்ட மொத்தம் 299 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா ஆணைகளை வழங்கினார்.

தொடர்ந்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் மக்கள் நலனுக்காக எண்ணற்ற அரசு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய சூழ்நிலையில் உள்ள பழங்குடியினர் சமூக மக்களான நரிக்குறவர்கள் நலனுக்காக குடியிருப்பு, வீட்டுமனை பட்டா வழங்கின உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

சென்னை மாவட்டத்தில் சைதாப்பேட்டை அருகே உள்ள கோட்டூர்புரம் பகுதியில் 158 நரிக்குறவர் குடும்பமாக வசித்து வருகிறார்கள். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது நரிக்குறவர் என்று அழைப்பது கண்ணியக் குறைவு என்று கருதி நெறி தவறாதவர்கள் நரிக்குறவர்கள் என்று குறிப்பிட்டார். 1980 ஆம் ஆண்டு இப்பகுதி நரிக்குறவர்கள் மக்களுக்கு முதன் முதலாக வாக்குரிமை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதேபோல இப்பகுதியில் குடிசை வீடுகளாக இருந்த சமயத்தில் அடிக்கடி தீ விபத்து போன்ற அசம்பாவிதங்கள் ஏற்பட்ட காரணத்தினால் குடிசை வீடுகளுக்கு மாற்றாக ஆஸ்பெஸ்டாஸ் ஓடுகள் பதித்த வீடுகளாக கட்டி கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது, கோட்டூர்புரம், ஜிப்ஸ் காலனி பகுதியில் உள்ள நரிக்குறவர் மக்களுக்கு நிரந்தர இருப்பிடம் வழங்க வேண்டும் என்ற நோக்கில் 158 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா ஆணைகள் இன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த இடம் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான இடமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு அரசின் மூலம் உரிய தடையின்மைச் சான்று பெறப்பட்டு 18 கோடி ரூபாய் மதிப்பிலான இடம் இப்பகுதி மக்களுக்கு இலவசமாக வீட்டுமனை பட்டாக்களாக வழங்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, மாநகராட்சி மண்டல குழு தலைவர் துரைராஜ் , வருவாய் கோட்டாட்சியர் ரங்கராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்டலம் 164வது வட்ட தி.மு.க சார்பில் நேரு காலனியில் வட்டச் செயலாளர் ஜேசுதாஸ் தலைமையில் நடைபெற்ற கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 73வது பிறந்தநாள் விழாவில் கலந்துக்கொண்டு உரையாற்றி 2,000 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். அருகில் மண்டல குழுத் தலைவர் என். சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே.இப்ராகிம், மாமன்ற உறுப்பினர் தேவி ஜேசுதாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலை!

# தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி தொண்டரணி - டி.ஸ்ரீதர் இல்ல மணவிழா வரவேற்பு!

## ஆ.ராசா எம்.பி. – அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – எஸ்.எஸ்.சிவசங்கர் – கோவி. செழியன் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் அன்பகம் கலை– நே.சிற்றரசு – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வாழ்த்துரை!

சென்னை, பிப்.10

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி தொண்டர் அணி அமைப்பாளர் - பாகப் பொறுப்பாளருமான டி.ஸ்ரீதர் எம்.டி.சி. - எம். பவானி ஆகியோரின் மகள் எஸ். அபிராமிக்கும், சென்னை அசோக்நகர் கே.ராமலிங்கம் - ஆர்.ஜெயலட்சுமி ஆகியோரின் மகன் ஆர்.விக்னேஷ்க்கும் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (10.2.2026 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு மேல் சென்னை அசோக்நகர் 1வது அவென்யு எம்.பி.கே. மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை ஏற்கிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தியாகராய நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை,



தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜி.டி. அம்பேத்கர், 135வது வட்டப் பொறுப்பாளர் புதூர் ஆர்.லோகு, முன்னாள் 135வது வட்டச் செலயாளர் எம்.எஸ். பழனி, தி.நகர் பகுதி துணை செயலாளர் வி.பி. எஸ்.ஜெனார்த்தா, அயலக அணி மாவட்ட தலைவர் எஸ். பாரதி ராஜா, தி.நகர் கிழக்குப் பகுதி இ.அ.து. அமைப்பாளர் புதூர் ச.பிரசன்னா, மாநில தொண்டர் அணி செயலாளர் பெ.சேகர், மாநில தொண்டர் அணி துணை செயலாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை, தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் ம.ஆனந்தன், மாவட்ட தலைவர் டி.முருகன், மாவட்ட துணை அமைப்பாளர் கே.ஆறுமுகம், தி.நகர் பகுதி துணை அமைப்பாளர் என்.ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தமிழ்நாடு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., நந்தனம் கி.மதி எம்.சி., மயிலை எஸ். முரளி, க.தனசேகரன் எம்.சி., வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., கே.கண்ணன் எம்.சி., ராஜா அன்பழகன் எம்.சி., ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., எஸ்.மோகன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.


காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி
(இருபாலர் பயிலும் கல்லூரி)
வேளச்சேரி - தாம்பரம் மெயின் ரோடு, மேடவாக்கம், சென்னை - 600 100

பொன்விழா கொண்டாட்டம்
"நிறைவு விழா"
கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அரங்கம், கல்லூரி வளாகம், மேடவாக்கம்.
10.02.2026, காலை 10.00 மணி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு. க. ஸ்டாலின்
சிறப்புரை

தலைமை
ஜனாப் எம். ஜி. தாவூத் மியாகான்
செயலர் மற்றும் தாளாளர்

முன்னிலை
ஜனாப் எ. முஹம்மத் அலி
தலைவர், CREDAI சென்னை.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
South India Shelter Pvt. Ltd.,

ஜனாப் சிராஜுதீன்
தலைவர், ராயல் கிங்ஸ் குரூப், சிங்கப்பூர்.

முனைவர் சே. சாதிக்
முன்னாள் துணை வேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்
புரவலர், காயிதே மில்லத் கல்லூரி, மேடவாக்கம், சென்னை.

வாழ்த்துரை
திரு. மா. சுப்ரமணியன்
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வு துறை அமைச்சர்

முனைவர் கோவி. செழியன்
மாண்புமிகு உயர்கல்வி துறை அமைச்சர்

முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்

நீதியரசர் கே. என். பாஷா
முன்னாள் நீதிபதி, சென்னை உயர் நீதிமன்றம்

ஜனாப் எ. முஹம்மத் அஷ்ரப்
தலைவர், OMEIAT

தங்களின் நல்வருகையை எதிர்நோக்கும்
காயிதே மில்லத் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை


### பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் இருக்கும் குறைபாடுகளைத் தீர்க்க

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, பிப்.10-

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தில் இருக்கும் குறைபாடுகளை CAG எனப்படும் தலைமை கணக்குத் தணிக்கையாளர் அவரது விரிவான அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதை தொடர்ந்து, அதனை தீர்ப்பதற்காக ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்றும், அத்திட்டத்தின்படி திறன் மேம்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை உறுதி செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்பது உள்ளிட்ட பல கேள்விகளை நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சருக்கு திமுக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :-

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டத்தின் பயனாளிகளுக்கு வேலை வாய்ப்பு குறைபாடு, தகுதி விதிமுறைகளை மீறுதல், பயனாளிகளின் நகல் பதிவுகள், பயிற்சி மையங்களை மூடுதல் மற்றும் பல வீனமான கண்காணிப்பு உள்பட திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை, CAG அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதா? அப்படியானால் அதன் விவரங்களை மாநில வாரியாக தெரிவிக்கவும்.

அத்திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படாத நிதி மற்றும் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளதா? அப்படியானால், அதற்கான காரணங்கள் என்ன?

திட்டத்தைச் செயல்படுத்தும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) மற்றும் மாநிலத் திறன் மேம்பாட்டு இயக்கங்கள் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு அரசு ஏதேனும் பொறுப்பை நிர்ணயித்துள்ளதா? அப்படி இருந்தால் அதன் விவரங்கள் என்ன?

இத்திட்டத்தில் தற்போதைய மற்றும் எதிர்கால கட்டங்களில் வெளிப்படைத்தன்மை, சிறந்த நிதி பயன்பாடு, நம்பகமான பயனாளி தரவுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வேலைவாய்ப்புகளை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்திருக்கும் அல்லது எடுக்க திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

### திருவிடந்தையில் நாளை "என் வாக்குச் சாவடி, வெற்றி வாக்குச் சாவடி" மண்டல மாநாட்டில்

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திலிருந்து 10 ஆயிரம் வாக்குச் சாவடி பி.எல்.ஏ.2 - பி.எல்.சி.-பி.டி.ஏ.-பி.ஒய்.ஓ. குழுவினர் பங்கேற்பு!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!



காஞ்சிபுரம், பிப்.10-

திருவிடந்தையில் நாளை நடைபெறும் "என் வாக்குச் சாவடி, வெற்றி வாக்குச் சாவடி" மண்டல மாநாட்டில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இருந்து 10 ஆயிரம் வாக்குச் சாவடி பி.எல்.ஏ.2, பி.எல்.சி.-பி.டி.ஏ-பி.ஒய்.ஓ. குழுவினர் பத்தாயிரம் பேர் பங்கேற்கின்றனர் என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் சந்தோஷத்தில் இருக்கிறார்கள். ஒவ்வொரும் திராவிட மாடல் ஆட்சியில் பலனடைந்து இருக்கிறார்கள் என்றே சொல்லலாம், முதியவர்களாக இருந்தாலும், இளைஞர்களாக இருந்தாலும், இளம் பெண்களாக இருந்தாலும், நடுத்தர வர்க்கத்தினராக இருந்தாலும், குழந்தைகளாக, சிறுவர்களாக, சிறுமிகளாக இருந்தாலும் அவர்களுக்கு தேவையானவற்றை, அவர்கள் கேட்பதற்கு முன்பே திட்டங்களைத் தீட்டி அவர்களுக்கு வழங்கி அவர்களின் குடும்பத்தில் விளக்கேற்றி வைத்துள்ளார் நமது முதல்வர்.

விவசாயிகளாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர், அரசு அலுவலர்களாக இருந்தாலும் சேரி, தூய்மைப்பணியாளர்களாக இருந்தாலும் சரி அவர்களின் எண்ணங்களை அறிந்து அவர்களின் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து அவர்களுக்கு வேண்டிய வற்றை நிறைவேற்றி கொடுத்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்துள்ளார் நமது முதல்வர்.

அப்படித்தான் அரசு அலுவலர்கள், ஆசிரியர்களின் 20 ஆண்டு கோரிக்கை பழைய ஓய்வூதியம் திட்டம் அமல் படுத்தப் பட வேண்டும் என்பது , அக் கோரிக்கையை இந்தியாவிலேயே எந்த மாநிலமும் நிறைவேற்றாத நிலையில் தமிழ்நாட்டில் அக் கோரிக்கையை நிறைவேற்றி அவர்கள் வாழ்வில்வசந்தததைத் வீசச் செய்துள்ளார். இதற்காக அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் எல்லாம் ஒன்று கூடி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் போது கழகத் தலைவருக்கு இனிப்பு ஊட்டிய காட்சியே இன்றும் நமக்கு அரசு ஊழியர்களின் ஆட்சி நடப்பதற்கு இதுவே சாட்சியாக அமைந்திருக்கின்றது.

முதல்வருக்கு, துணையாக துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களும் இன்றைக்கு விளையாட்டுத் துறையை இந்தியாவிலேயே முன் மாதிரி துறையாக மாற்றி, தமிழகம் விளையாட்டில் சிறந்து விளங்கக் கூடிய வகையில் வீரர்களை, வீராங்கனைகளை உருவாக்கி பார் போற்றும் வகையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்.

இப்படி அனைத்து தரப்பினருக்கும் அனைத்து திட்டங்களையும் தீட்டி செயல்படுத்தி வரும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு 2026 சட்டமன்றத் தேர்தலிலும் தமிழ்நாட்டு மக்கள் வாக்குகளை அள்ளி வழங்கி மீண்டும் தி.மு.கழகத்தை ஏழாவது முறையாக அரியணையில் அமர்ந்திடவும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை இரண்டாவது முறையாக முதல்வராக்கி ஆட்சி கட்டிலில் அமர வைக்க தமிர்நாட்டு மக்கள் முடிவு செய்துவிட்டனர். அதற்கான முன்னோட்டமாகத் தான் என் வாக்குச் சாவடி, வெற்றி வாக்குச் சாவடி என்ற தலைப்பில் சென்னை - விழுப்புரம் மாவட்டங்கள் பங்கேற்றிடும் மண்டல மாநாடு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், திருவிடந்தை - கலைஞர் திடலில் நாளை (11.02.2026- புதன்கிழமை) அன்று மாலை 4 மணிக்கு நடைபெறுகின்றது.

இந்த சென்னை- விழுப்புரம் மண்டலத்தைச் சேர்ந்த வாக்குச் சாவடி முகவர்கள் பிஎல்ஏ2, பிஎல்சி-பிடிஏ-பிஒய்ஓ குழுவினர் பங்கேற்றிடும் பிரமாண்டமான மண்டல மாநாட்டில் 1.50 இலட்சம் பேர் பேங்கேற்று சிறப்பிக்க இருக்கின்றனர்.

இந்த மாநாட்டில் நமது கழகத் தலைவர்- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வரவிருக்கின்ற 2026 தேர்தலில் நாம் எப்படி களப்பணி ஆற்ற வேண்டும், எப்படி எதிர்க் கட்சியினருக்கு பதிலிளித்திட வேண்டும், வாக்குச் சாவடியில் வாக்குச் சாவடி முகவர்கள் எப்படி பணியாற்றிட வேண்டும் என்பது குறித்தெல்லாம் கருத்துரை வழங்கி சிறப்புரையாற்ற இருக்கிறார்.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையை, கருத்துரையை கேட்டு தேர்தல் களம் நம்மை நெருங்கிக் கொண்டு இருக்கிறது, இச் சமயத்தில் நடைபெறும் சென்னை - விழுப்புரம் மண்டல மாநாட்டில் பங்கேற்று நமது தேர்தல் களப் பணியை கண் துஞ்சாது பணியற்றிட உறுதி ஏற்றிடும் மாநாடாக இதனைக் கருத்தி, நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இருந்து பிஎல்ஏ2, பிஎல்சி-பிடிஏ-பிஒய்ஓ குழுவினர் 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

எனவே காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இருந்து வாக்குச்சாவடி பாக முகவர்கள் பிஎல்ஏ2, பிஎல்சி-பிடிஏ-பிஒய்ஓ குழுவினர் அனைவரும் நாளை (11.2.2026) மாலை 3 மணிக்கே சென்னை விழுப்புரம் மண்டல மாநாடு நடைபெறும் திருவிடந்தை கலைஞர் திடலுக்கு அணிஅணியாக வருகை தந்து, கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.